புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஜனவரி 05, 2023 | புரட்சி 21 | முழக்கம் 51 | விலை: ரூ.3.00

# 2022 : கழகம் கடந்து வந்த பாதை

*2022இல் திராவிடர் விடுதலைக் கழகத்தின் முக்கிய செயல்பாடுகள் குறித்து ஒரு சுருக்கமான தொகுப்பு.*

**தொகுப்பு: க. இராசேந்திரன்**

**ஜனவரி :** டெல்லி குடியரசு தின அணி வகுப்பில் தமிழக அரசு சார்பில் தேர்வு செய்யப்பட்ட தமிழக ‘சுதந்திரப் போராட்டக்காரர்களான’ வ.உ.சி., பாரதியார், வேலு நாச்சியார், மருது சகோதரர்களின் அலங்கார ஊர்தியை கடைசி நேரத்தில் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி அனுமதிக்க மறுத்தது. தமிழ்நாட்டின் குடியரசு தின அணி வகுப்பில் இந்த ஊர்திகள் பங்கேற்கும் என்று அறிவித்தார் தமிழக முதல்வர். இந்தத் தலைவர்களோடு பெரியார் சிலையையும் சேர்த்து தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் தமிழக அரசு மக்கள் பார்வைக்கு வைத்ததோடு குடியரசு நாள் அணி வகுப்பிலும் பங்கேற்கச் செய்தது, தமிழக அரசு.

மருத்துவ உயர் மட்டப் படிப்புகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத ஒதுக்கீடு வழங்க முடியாது என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுத்த நிலைப்பாட்டுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்து வெற்றி பெற்றது. தமிழக அரசு தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; அனைத்து மாநிலங்களுக்கும் சமூக நீதியை மீட்டு மாபெரும் சாதனை படைத்தது. (ஜன.20, 2022)

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலையில் போக்கு வரத்துக்கு இடையூறாக அமைக்கப்பட்ட கோயிலை அகற்றக் கூடாது என்று பக்தர் ஒருவர் தொடர்ந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வு மனுவை தள்ளுபடி செய்ததோடு நெடுஞ் சாலை அனைத்து மதத்துக்கும் பொதுவானது; ஒரு குறிப்பிட்ட மதத்தினர் மட்டும் சொந்தம் கொண்டாட முடியாது என்று தீர்ப்பளித்ததோடு கடவுள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும்தான் இருக்கிறார் என்று சொந்தம் கொண்டாட முடியாது என்றும் கூறியது.

**பிப்ரவரி:** தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட ‘நீட் விலக்கு’ மசோதாவை திருப்பி அனுப்பிய தமிழக ஆளுநரைக் கண்டித்து ஆளுநர் பதவி விலகக் கோரி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஆளுநர் மாளிகை முற்றுகை; இரயில் மறியல்; கண்டன ஆர்ப்பாட்டங்கள் சென்னை, கோவை, சேலம், மயிலாடுதுறை உள்ளிட்ட பல ஊர்களில் நடந்தன.

தமிழக அரசு ஆளுநரின் குடியரசு நாள் தேனீர் விருந்தைப் புறக்கணித்தது.

தஞ்சை மாவட்டம் மைக்கேல்பட்டி பள்ளி மாணவியின் ‘தற்கொலை’யை முன் வைத்து பொய்யான தகவலைப் பரப்பி வரும் தமிழக பா.ஜ.க.வைக் கண்டித்து சேலம் நங்கவள்ளி தி.வி.க. சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (பிப்.1, 2022)

பிப்.14 - காதலர் நாளை ஜாதி மறுப்பு இணையர்களுக்கு விருதுகள் வழங்கும் விழாவாக சென்னை, மதுரையில் கழக சார்பில் கொண்டாடப்பட்டது.

- கூடங்குளத்தில் அணுக்கழிவுகளை புதைக்கும் மய்யம் அமைக்கும் ஒன்றிய பா.ஜ.க. முயற்சியைக் கண்டித்து, அணுசக்தி எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டன அறிக்கை வெளியிட்டார்.
- ஜாதி ஒழிப்புப் புரட்சி பாடகர் லெனின் சுப்பையா புதுவையில் முடிவெய்தினார் (பிப்.16). கழக சார்பில் புதுவையில் இறுதி மரியாதை செலுத்தப்பட்டதோடு சென்னை தலைமைக் கழக அலுவலகத்தில் கழக சார்பில் இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டது (பிப்.20). லெனின் சுப்பையா நினைவாக அவரது பாடல்களை கார்த்திக் குழுவினர் பாடி ‘இசை அஞ்சலி’ செலுத்தினர்.
- தேசிய பங்குசந்தையின் முன்னாள் நிர்வாக இயக்குனர் சித்ரா ராமகிருஷ்ணன் (பார்ப்பனர்) ‘சாமியார்’ ஆலோசனையோடு நடத்திய மோசடிகள் வெளிச்சத்துக்கு வந்தது. சித்ரா கைது செய்யப்பட்டார்.
- தில்லை சிற்றம்பல மேடையில் ‘தலித்’ மக்களை தரிசனம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டது. தீட்சதப் பார்ப்பனர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம் பாய்ந்தது. தீட்சதர்கள் அத்துமீறலைக் கண்டித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மக்கள் கூட்டமைப்பு சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் தில்லையில் நடந்தது. (பிப்.28)

**மார்ச் :** சிவராத்திரியை அறநிலையத் துறையே அரசு சார்பில் மக்கள் விழாவாக நடத்தும் என்று அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு அறிவிப்பைக் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் கண்டனக் குரல் எழுப்பியது. கடும் எதிர்ப்புகள் உருவான நிலையில் அறநிலையத் துறை பெயரள வுக்கு ‘விழா’வை நடத்தி ‘பிரம்மாண்டத்தை’ நிறுத்தியது.

சேலம் பொறியியல் கல்லூரி மாணவன் கோகுல்ராஜ் , ஜாதி ஆவணப் படுகெலை வழக்கில் யுவராஜ் என்ற கொங்கு வேளாளர் பேரவைப் பொறுப்பாளர் உள்ளிட்ட 10 பேர் குற்றவாளிகள் என்று சென்னை உயர்நீதி மன்றம் உறுதி செய்தது. 2015ஆம் ஆண்டிலிருந்து திராவிடர் விடுதலைக் கழகம் இந்த வழக்கில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து போராடி வந்தது குறிப்பிடத்தக்கது.

நடிகர் சூர்யா நடித்த ‘எதற்கும் துணிந்தவன்’ திரைப்படத்தை செஞ்சி திரையரங்கில் வெளியிடக் கூடாது என்று பா.ம.க. மிரட்டி படம் போடுவதை நிறுத்தியது. கழகத் தோழர் பெரியார் சாக்ரட்டீஸ் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளைச் சந்தித்து படத்தைத் திரையிட வேண்டும் என்று வலியுறுத்தி அமைச்சர் கே.எஸ். மஸ்தானை சந்தித்து மனு தந்தனர்.

மதவெறிக் கும்பலால் படுகொலை செய்யப்பட்ட கோவை கழகத் தோழர் ஃபாரூக், அய்ந்தாமாண்டு நினைவு நாள் சென்னை மாவட்டக் கழகம் சார்பில் தலைமை கழகத்தில் நடந்தது.

பெரியாருடைய சிந்தனைகளை மாநில மற்றும் உலக மொழிகளில் வெளியிடுவதற்கு தமிழ்நாடு தி.மு.க. ஆட்சி, நிதி நிலை அறிக்கையில் ரூ.5 கோடி ஒதுக்கி அறிவித்தது.

தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்துக்குப் பதிலாக அரசுப் பள்ளிகளில் படித்த பெண்களின் உயர்கல்விக்கு மாதம் ரூ.1000 வழங்கும் சீரிய திட்டத்தை தமிழக அரசு நிதி நிலை அறிக்கையில் அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

**ஏப்ரல் :** கழகத் தலைமைக் குழு ஏப்.2ஆம் தேதியும் அடுத்த நாள் ஏப்.3ஆம் தேதியும் முறையே தலைமைக் குழுவும் கூடி கழக செயலவையும் ஈரோட்டில் கழக வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்தது.

பா.ஜ.க. மாநிலங்களவை உறுப்பினர் ராகேஷ் சின்கா என்பவர், மீண்டும் வேதகாலத்துக்கு திரும்ப வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டு வந்த தனி நபர் மசோதாவை எதிர்த்து திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் ஜவஹர் சர்க்கார், இராஷ்டிரிய ஜனதாதள கட்சி உறுப்பினர் டாக்டர் மனோஜ் குமார் ஜா பதிலடி தந்தார். வேதகால மரபு என்பது பார்ப்பனிய மரபு என்றுபதிலடி தந்தனர். பெரியாரை மேற்கோள் காட்டி பேசிய மனோஜ்குமார், ஜவஹர் பெரியாரின் இராமாயணம் பற்றிய கருத்துகளைத் தாம் ஆதரிப்பதாகக் கூறினார்.

பொது இடத்தை ஆக்கிரமித்து கோயில் கட்டுமாறு எந்தக் கடவுளும் கேட்கவில்லை. அப்படி கடவுளே கோயிலைக் கட்டினாலும் நீதிமன்றம் அகற்றும் என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் நாமக்கல்லில் பொது இடத்தில் ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட கோயில் தொடர்பான வழக்கில் தீர்ப்பளித்தது.

“நமது அடையாளம் - திராவிடன் மாடல்” எனும் தலைப்பில் ஏப்.20இல் தொடங்கி மே 14 வரை 11 மண்டல மாநாடுகளும் மாநாட்டு நோக்கங்களை விளக்கி 400 தெருமுனைக் கூட்டங்களையும் நடத்த ஈரோட்டில் கூடிய கழக செயலவை முடிவு செய்தது. சென்னை, கோவை, அன்னூர், மேட்டுப்பாளையம், ஈரோடு, விழுப்புரம், மயிலாடுதுறை, சங்கராபுரம், கிருட்டிணகிரி, திருப்பூர், பள்ளிப்பாளையம், மதுரை, சிவகங்கை, குடந்தை, குடியாத்தம், கீழப்பாவூர் உள்ளிட்ட பகுதிகளில் மண்டல மாநாடுகள் மற்றும் தெருமுனைக் கூட்டங்கள் எழுச்சி நடை போட்டன.

ஜாதி ஆணவப் படுகொலை தடைச் சட்டம் கொண்டு வர வலியுறுத்தி கள்ளக்குறிச்சி மாவட்டம் சார்பாக சங்கராபுரத்தில் ஒரு நாள் பரப்புரைப் பயணம் நடந்தது. (ஏப்.12)

**மே :** சென்னை வீதிகளில் உள்ள ஜாதிப் பெயர்களை நீக்கக் கோரி சென்னை மயிலைப் பகுதி கழகத் தோழர்கள், மாநகராட்சி அதிகாரிகளிடம் கோரிக்கை மனு அளித்ததைத் தொடர்ந்து ஜாதிப் பெயர்கள் நீக்கப்பட்டன.

**ஜூன் :** கழகத் தலைமைக் குழு திருப்பூரில் கூடி (ஜூன் 17) நடந்து முடிந்த மாநில மாநாடுகள், தெருமுனைக் கூட்டங்கள், நிறை குறைகள் குறித்து ஆலோசித்தது.

**ஜூலை :** களப்பணியாளர்களுக்கு மூன்றுநாள் பயிற்சி முகாம் (ஜூலை 23, 24, 25) மற்றும் இணைய தள செயல்பட்டாளருக்கு ஒரு நாள் பயிற்சி (ஜூலை 2) திருச்சி ‘டான்பாஸ்கோ மீடியா’வில் நடந்தது.

**ஆகஸ்ட் :** சேலத்தில் மாட்டிறைச்சி உணவு கடைக்கு சீல் வைத்த வருவாய்த் துறை, காவல்துறை அதிகாரிகளைக் கண்டித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. (ஆக.5)

நீர்நிலைகளை மாசு படுத்தும் வேதிப் பொருள்களால் உருவாக்கப்பட்ட விநாயகன் சிலைகளைக் கரைப்பதற்கு தடை செய்யக் கோரி மயிலாடுதுறை தி.வி.க. சார்பில் விளையாட்டுத் துறை அமைச்சர் வீ. மெய்யநாதனிடம் மனு அளிக்கப் பட்டது. (ஆக.5)

கழகத்தின் 10ஆம் ஆண்டு நிறைவு விழாவை யொட்டி ஆக.12இல் மேட்டூர், சேலம், சென்னை, கோவை, திருப்பூரில் கழகப் பரப்புரை தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

ஜாதி மத மோதல்களை உருவாக்கும் ‘கிடுகு’ திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் இயக்குனர் மீது நடவடிக்கைக் கோரி கழக சார்பில் சென்னை மாவட்டக் காவல்துறை ஆணையரிடம் மனு அளிக்கப்பட்டது. (ஆக.22)

அரசின் வழிகட்டும் நெறிமுறைகளைக் கண்டிப்பாக இந்து முன்னணி சங்கிகள் விநாயகன் ஊர்வலத்தில் பின்பற்றப்படுகிறார்களா என்பதைக் கண்காணிக்கக் கோரி காவல்துறையிடம் கோவை, சென்னை மாவட்டக் கழகங்கள் மனு அளித்தன.

**செப்டம்பர் :** மேட்டூர் பேருந்து நிலையம் அருகே சட்டவிரோதமாக இந்து முன்னணி நிறுவிய திடீர் விநாயகன் சிலை, கழகத் தோழர்கள் முயற்சியால் அகற்றப்பட்டது.

சென்னை மாவட்டக் கழகம் சார்பில் இந்துப் பெண்களை இழிவுப்படுத்தும் மனு சாஸ்திரத்தைத் தடை செய்யக் கோரி பெண்களே முழுமையாகப் பங்கேற்கும் ஆர்ப்பாட்டம் தியாகராயர் நகர் பெரியார் சிலை அருகே நடந்தது.

தி.மு.க. இளைஞரணி தமிழகம் முழுதும் நடத்திய திராவிட மாடல் பயிற்சி பாசறையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பல்வேறு ஊர்களில் பங்கேற்று திராவிடர் இயக்க வரலாறு பற்றி உரையாற்றினார்.

அனைத்து ஜாதியையும் சார்ந்த ஓராண்டு பணி

(4ஆம் பக்கம்)

## வெட்கப்பட வேண்டும்

தமிழ்நாட்டுக் கிராமங்களில் தீண்டாமை வெறி இன்னமும் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. இது மறுக்கப்பட முடியாத உண்மை. அரசியல் கட்சிகள் அனைத்தும் கள்ள மவுனம் சாதிக்கின்றன. ஓட்டு வங்கி அரசியலை முன் வைத்து தான் அவர்கள் பிரச்சனை களை பார்க்கிறார்களே தவிர, சமூக அவலங்கள் அவர்களின் கண்களுக்குத் தெரிவதே இல்லை.

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவிடியல் கிராமத்தில் இருந்து வெட்கக் கேடான, நாம் அனைவரும் தலைகுனிய வேண்டிய செய்தி வந்திருக்கிறது. இந்தப் பகுதியில் வாழ்கின்ற தலித் மக்கள் பயன்படுத்துகின்ற குடிநீர் தொட்டியில், மனித மலத்தைக் கலந்து வைத்திருக்கிறது ஜாதி வெறி கும்பல் ஒன்று. அந்தப் பகுதி குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு பலரும் பாதிக்கப்பட்ட நிலையில், புகார் வரவே மாவட்டத் ஆட்சித் தலைவர் கவிதா ராமு, மாவட்ட காவல் துறை அதிகாரி வந்திதா பாண்டே ஆகியோர், வருவாய் துறை அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டபோது, தண்ணீர் தொட்டி யில் மலம் கலந்திருப்பது உண்மை என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 5 பிரிவுகளின் கீழ் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது.

அங்கே இருக்கிற இறையூர் கிராமத்தில் உள்ள தேநீர்க் கடையில் இரட்டைக் குவளை முறை பின்பற்றப்பட்டு வருகிறது. அதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் சென்று விசாரித்து, தேநீர் கடைக்காரர் மூக்கையா என்பவரை கைது செய்து இருக்கிறார். அதையடுத்து அங்கே இருக்கிற அய்யனார் கோவிலில் தலித் மக்களை சாமி கும்பிட அனுமதி அளித்தது இல்லை. அவர்களை அழைத்துக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கோவிலுக்குள் சென்றிருக்கிறார். ஜாதி வெறியர்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார்கள். அந்த கிராமத்தைச் சேர்ந்த சிங்கம்மாள் என்ற பெண், ஆதிக்க ஜாதியைச் சேர்ந்தவர் சாமி வந்தது போல் ஆடி, தலித் மக்களை இழிவாக பேசி சாமி குத்தம் நடந்தது போல், ஒரு நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறார். இந்த சாமியாடும் நாடகங்களுக்கு பணியாமல், சிங்கம்மாள் என்ற பெண்ணையும் கைது செய்ய உத்தரவிட்டிருக்கிறார் மாவட்ட ஆட்சித் தலைவர்.

இது ஒரு உதாரணம். தமிழ்நாடு முழுவதும் பல கிராமங்கள் இப்படித் தான் இருந்து கொண்டு இருக்கின்றன. ஒரு பக்கம் இந்து ஒற்றுமையை பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்த தொட்டியில் மலத்தைக் கலந்தவனும் இந்து; அந்த நீரைக் குடித்து பாதிக்கப்பட்டவர்களும் இந்து. இந்து மதம் இப்படித் தான் "மலத்தின் முடை நாற்றம் வீசுகின்ற ஒரு மதமாக மாறிப்போய் இருக்கிறது".

எந்த இந்து முன்னணியும், சந்து முன்னணியும், சங்கிகளும் இந்த சமூக ஒடுக்குமுறைகளைக் கண்டிப்பதற்கு, இந்து மதத்தில் இப்படி இருக்கலாமா ? என்று கேள்வி கேட்பதற்குத் தயாராக இல்லை. ஆனால், மதத்தைப் புண்படுத்தி விட்டார்கள், கடவுளைப் புண்படுத்தி விட்டார்கள் என்று ஓலமிடுவதற்கு முன் வந்து விடுகிறார்கள்.

தமிழ்நாடு அரசு இப்படியான ஜாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, கட்சி மாச்சரியம் பார்க்காமல், வாக்கு வங்கியைப் பார்க்காமல் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அப்போது தான் திராவிட மாடல் ஆட்சி முழுமையான அங்கீகாரத்தை பெறும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

# காற்றில் பறக்கும் ஒற்றை இந்தியா

ஒன்றிய ஆட்சி ஒற்றை இந்தியாவின் பெருமையைப் பேசிக் கொண்டிருக்கிறது. நாடு முழுவதும் ஒரே மதம், ஒரே ரேசன் கார்டு, ஒரே மொழி அதிலும் புனித மானது சமஸ்கிருதம் என்றெல்லாம் ஒற்றை ஆட்சி பற்றிப் பேசி, நாட்டை சர்வாதிகாரப் பாதைக்கு இழுத்துச் சென்று இந்தியாவை இந்து இராஷ்டிரமாக மாற்றலாம் என்பது அவர்கள் போடுகிற தந்திரமான கணக்கு. சரி இருக்கட்டும்;

ஒற்றை இந்தியாவை இவர்கள் உருவாக்குவதற்கு முன்பாக, இவர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கிற மாநிலங்களில் தற்போது தலைதூக்கி ஆடிக் கொண்டிருக்கிற எல்லைப் பிரச்சனைகளை தீர்க்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்களே அதற்கு என்ன பதிலை சொல்லப் போகிறார்கள். 1956 ஆம் ஆண்டு மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அப்போது பெலகாவி மாவட்டத்தில், மராத்தி பேசும் மக்கள் வசிக்கும், 865 கிராமங்கள் கர்நாடக மாநிலத்துடன் இணைக்கப்பட்டன. அதே போன்று மகராஷ்டிராவில் ஜாட் தாலுகாவில் கன்னடம் பேசும் கிராமங்கள் கர்நாடக மாநிலத்துடன் இணைக்கப்பட்டன. இரு மாநிலங்களின் எல்லைகளிலும் அந்தந்த மொழி பேசும் மக்கள் இணக்கமாகத் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால், கட்சிகள் தங்களது சுயநலத்திற்காக இந்த எல்லைப் பிரச்சனையை தூண்டிவிட்டு கலவரத்தை செய்து வருகின்றன.

பெலஹாவி மகராஷ்டிராவிற்கே சொந்தம் என்று ஒரு கட்சி போர்க்கொடி தூக்கி அவ்வப்போது கலவரங்களை நடத்தி வருகின்றது. அந்தக் கட்சியின் பெயர் "மகராஷ்டிர ஏகிரன்" கட்சி. அதே போல கர்நாடகாவிலும் ஒரு கட்சி இருக்கிறது. அதன் பெயர் "இரட்சண வேதிக கட்சி" என்று பெயர். அந்தக் கட்சி, மகராஷ்டிர எல்லைகளில் இணைக் கப்பட்ட கர்நாடக கிராமங்களை மீண்டும் கர்நாடகாவுடன் இணைக்க வேண்டும் என்று அவ்வப்போது கலவரங்களை செய்து வருகிறது. கட்சிகள் தான் இப்படி இருக்கிறது என்றால் முதலமைச்சர்களும் அதற்கு ஒன்றும் குறைந்தவர்கள் இல்லை.

மகராஷ்டிராவின் முதலமைச்சராக இருக்கின்ற ஏக்நாத் ஷிண்டே, கர்நாடக முதலமைச்சராக இருக்கின்ற பொம்மை இருவரும் அமித்ஷா வை சந்தித்து இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று முறையிட்டார்கள். அமித்ஷா இரண்டு மாநிலங்களிலும் மூன்று எம்.பி.களைக் கொண்ட குழுவை நியமித்து சட்ட ரீதியான தீர்வைக் காணலாம் என்ற உறுதியளித்தார். உறுதி அப்படியே கிடப்பில் போடப்பட்டு இருக்கிறது. பிரச்சினை நீதிமன்றத்திலும் நிலுவையிலே இருக்கிறது.

இந்நிலையில் கர்நாடக முதலமைச்சர் பொம்மை அந்த மாநிலத்தின் சட்டமன்றத்தில், கர்நாடகத்தில் இருந்து மகராஷ்டிராவில் இணைக்கப்பட்ட பகுதிகளில் ஒரு துளி அங்குலத்தைக் கூட விட்டுத் தர மாட்டோம் என்று கூறி விட்டார். மகராஷ்டிர முதலமைச்சர் இந்த கர்நாடகத்துடன் இணைக்கப்பட்ட 865 கிராமங்களை மகராஷ்டிராவுடன் சட்ட ரீதியாக இணைக்கப்படும் என்று சட்டமன்றத்திலேயே தீர்மானம் கொண்டு வந்து அறிவித்து விட்டார்.

மோதல்கள் வெடித்துக் கொண்டு இருக்கின்றன. காரணம், கர்நாடகா தற்போது சந்திக்கவிருக்கும் தேர்தல்தான். தேர்தலில் வாக்கு வங்கிக்காக இந்த நாடகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒற்றை இந்தியாவும், ஒற்றை இந்து மதமும், ஒற்றைக் கலாச்சாரமும் பேசுகின்ற பாஜக ஆட்சி, இரண்டு மாநிலங்களின் எல்லைகளில் வாழ்கிறவர்களும் பெரும்பான்மையினர் இந்துக்கள் தான், இரண்டு மாநில முதல்வர்களும் இந்துக்கள் தான். இவர்களுக்குள் ஏன் ஒற்றைத் தன்மையை, ஒற்றுமையை ஏற்படுத்த முடியவில்லை ? என்ற கேள்விக்கு பதில் கூறியாக வேண்டும்.

# "அறிவு கெட்ட மூடனே; பசு மாடே"

ஜாதி மனிதர்களை மட்டுமல்ல; பறவை விலங்குகளையும் விட்டு வைக்கவில்லை. கிளி உயர்ஜாதி, கழுகு கீழ் ஜாதி, 'கோமாதா' 'பிராமணாள்'; கழுதை 'சூத்திராள்'; கோமாதாவின் சிறுநீர், சாணம் எல்லாம் புனிதம். பசுவைக் கூட செத்தாலும் வெட்டக் கூடாது. அதற்காக சட்டங்களே பா.ஜ. க. ஆட்சிகளில் போடப்பட்டு வருகின்றன. பார்ப்பனர் வாசிக்கும் தாளக் கருவியான மிருதங்கம், இளம் பசு மாட்டுத் தோளில் தான் செய்யப்படுகிறது. ஆனால் அதைத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுவோர் கீழ்ஜாதியினர்.

பாலக்காடு பார்ப்பன மிருதங்க வித்வான் ஒருவர், காஞ்சி சீனியர் சங்கராச்சாரியிடமே நேரில் போய் பசு மாட்டுத் தோலில் உருவாகும் மிருதங்கத்தை நாம் வாசிப்பது பாவமில்லையா என்று கேட்டாராம். சங்கராச்சாரி, "எல்லாவற்றுக்குமே விதிவிலக்கு உண்டு; தோஷமில்லை" என்று பதில் கூறினாராம். பார்ப்பனர்களை எதிர்த்துப் பேசி வரும் டி.எம். கிருஷ்ணா (இவரும் பார்ப்பனர் தான்). தனது நூலில் இதை எழுதி வைத்துள்ளார். பசுவுக்கு புனிதம் பேசும் வேதியர் கூட்டம் அதே பசு செத்துப் போய் விட்டால் 'அடக்கம்' செய்ய 'கீழ் ஜாதிக்காரர்' என்று இவர்கள் கூறி வரும் ஜாதியைத்தான் அழைப்பார்கள்; ஒரு சவுண்டிகூட செத்த மாட்டைத் தூக்க மாட்டான். அதே நேரத்தில் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் முன்னணியில் இருப்பது பார்ப்பனர்களின் நிறுவனங்கள் தான்.

யானை சைவப் பிராணி என்பதால் அதற்கு மதச் சாயம் பூசி கோயிலில் கூட்டம் சேர்க்கப் பயன்படுத்தினார்கள். அதிலும் 'வடகலை -தென்கலை' நாமப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. இனி கோயில்களுக்காக யானைகளை வாங்கக் கூடாது என்று அண்மையில் சென்னை உயர்நீதிமன்றம் ஒரு நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறது. கழுதை வாங்கலாமா என்று எதிர் கேள்வி கேட்காதீர்கள். கழுதைக்கும் நாமம் போடலாம்; விபூதி அடிக்கலாம்; அது என்ன மனிதரா? ஒரு வேறுபாடும் அதுக்கு புரியாது. 'யானை' ரசிகையான மறைந்த ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது கோயில் யானைகளின் மன அழுத்தத்தைப் போக்குவதற்கு 'புத்தாக்கப் பயிற்சி'களை பல கோடி அரசு செலவில் நடத்தினார்.

**மதம் பிடித்த யானையை அங்குசத்தாலோ, பாகனாலோ கூட அடக்க முடியாது. மனிதர்களை மிருகமாக்கும் மதவெறி மிருகத்திடமே வந்து விட்டால் என்னவாகும்?**

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் (ஜன.2, 2023) ஒரு செய்தி வந்திருக்கிறது. தென்காசி மாவட்டத்தில் கிராமங்களில் வீதி வீதியாக கழுதைப் பால் கூவி கூவி விற்கப்படுகிறதுதாம். ஒரு லிட்டர் கழுதைப் பாலின் விலை ரூ.2000. குழந்தைகளுக்கு கழுதைப் பால் தருவது நோய்களைத் தீர்க்கும் ஜீரண சக்தியை அதிகரிக்கும் என்று கிராம மக்கள் இன்னமும் நம்புகிறார்கள். 25 மில்லி கழுதைப் பாலை வாங்கி சூடாக்காமல் அப்படியே 'சங்கு' வழியாக குழந்தைக்கு ஊட்டுகிறார்களாம். வீதி வீதியாக கழுதைகளை ஓட்டி வந்து கண் முன்பே கறந்து விற்கிறார்களாம்.

கழுதைப் பால் என்றாலும் பசுவின் பால் என்றாலும் இரண்டிலும் ஒரே சத்து தான் அடங்கியிருக்கிறது. கழுதைப் பாலுக்கு நோய் தீர்க்கும் குணம் உண்டு என்பது அறிவியலால் நிரூபிக்கப்படவில்லை. அது மூடநம்பிக்கை தான் என்று மருத்துவர்கள் கூறுவதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு செய்தி கூறுகிறது.

'எருமை மாடு', 'அறிவு கெட்ட கழுதை' என்பவை வழக்கத்தில் வசவுச் சொல்லாகவே மாறி விட்டன. 'பசு மாட்டுக்குப் பிறந்தவனே; நீ பசு மூத்திரத்தையா குடிக்கிறாய்?' என்றெல்லாம் தவறிப் போய்கூட வாய்களில் வருவதில்லை. அந்த அளவுக்கு பார்ப்பனியம் மூளைக்குள் நிரந்தரமாக 'டெண்ட்' அடித்து உட்கார்ந்திருக்கிறது.

கழுதையும் உதைக்கும் பசுவும் கொம்பைப் பிடித்து ஆட்டினால் உதைக்கும்; இரண்டும் பால் கறக்கும்; இரண்டும் செத்து மடியும்; ஒரே ஒரு வித்தியாசம் தான். கழுதை பொதி சுமக்கும்; பசு அதற்கும் தகுதி இல்லை. மாறாக பார்ப்பனியம் தான் பசுவை சுமந்து கொண்டு திரிகிறது.

உ.பி. ஆதித்ய நாத் பசுவுக்கு அரசு செலவில் குளிர் காக்கும் போர்வைகளை வழங்கியிருக்கிறார். அங்கே குழந்தைகள் தான் மருத்துவமனையில் 'ஆக்சிஜன்' சிலிண்டர் பற்றாக்குறையில் செத்து மடிகிறார்கள்! பசுவுக்கு பூணூல் போடாத ஒரு குறை தான்!

**– கோடங்குடி மாரிமுத்து**

# தமிழரின் வைதீக நோய் தீர்க்கும் மாமருந்து சுயமரியாதை

*பேராசிரியர் க. அன்பழகன் நூற்றாண்டு நினைவாக அவர் `விடுதலை' பெரியார் பிறந்த நாள் மலரில் எழுதிய கட்டுரையை (செப்.17, 1986) வெளியிடுகிறோம். (சென்ற இதழ்த் தொடர்ச்சி)*

பல்வேறுபட்ட குல (கூட்ட) மக்களாக வாழ்ந்த நிலையை ஏதுவாக்கி வருணாசிரமக் கொள்கையைப் புகுத்தி - தமிழர்களைச் சூத்திரர்களாகவும், பஞ்சமர் களாகவும் ஏற்றிடும் நிலையை பார்ப்பனர்கள் உருவாக்கினர்.

ஆரிய கலாச்சாரத்தினைப் பரப்பியவர் 'எசமானர்' நிலைப் பெற்றனர். வழிவழி வந்த உயர்ந்த பண்பாட்டில் நிலைப் பெற்றிருந்த தமிழர் - கற்பனையாக பிறவி இழி மக்கள் ஆக்கப்பட்டு மீளா அடிமைகளாயினர்.

அதனால் தான் பிறிதொரு இனத்துடன் வரலாற்றுத் தொடர்பு ஏற்படும் காலத்திலும் - அதைத் தொடர்ந்து வளர்ந்திருக்க வேண்டிய இன உணர்வும்-மொழிப் பற்றும்- மங்கி, மறைந்து தேய்ந்து போயிருப்பதைக் காண்கிறோம்.

“வைதீக மத வழிபற்று” ஆரியத்தைப் பிரித்துக் காணும் ஆற்றலை (சிந்தனையை) இழக்கச் செய்தது.

வருணாசிரம - மனுதர்ம நெறி தமிழர் களை ஒன்று பட முடியாத அளவுக்கு பிரித்து வைத்ததுடன், குலத்தையே ஜாதியாக நம்பி பேதம் வளர்க்கச் செய்தவுடன் “இழி பிறவி” என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்களே - தம்மினும் இழிபிறவியாகப் பஞ்சமர்களைக் கருத செய்தது. வரலாற்று அடிப்படையில் கூறப்படும் ஒரு செய்தி - ஆரிய மத சாத்திர, ஜாதி எண்ணங்களை அடியோடு ஏற்க மறுத்தவர்களை தீண்டப்படாதவர் ஆக ஒதுக்கப்பட்ட ஆதிதிராவிடர் என்பதாகும்.

வடமொழிக்குத் தரப்பட்ட ஏற்றமும், அதை தமிழர்கள் ஏற்றுக் கொண்டதும், தமிழ் மொழியைத் தாழ்த்தியதால் - அம் மொழிக் குரிய மக்கள் தமது அடிமை நிலையை இயல்பானதாகக் கருதி அதற்கு உடன்பட்டு வாழவழி செய்ததுடன் தன்னம்பிக்கை இழந்து தலை நிமிர முடியாத நிலையில் தள்ளிவிட்டது.


தமிழர்களிடையே அறநெறியை வலியுறுத்தி, அன்புடைமை, பண்புடைமை, நன்றியுணர்வு, ஒப்புரவு, பிறவிச் சமன்மை, தோழமை, ஆன்ம நேயம், சமரச சன்மார்க்கம் ஆகியவை குறித்து ஆன்றோரும் சான்றோரும் அறிவுறுத்தியுள்ள போதிலும், அவற்றை ஏற்றுச் செயல் படுத்துவதற்கான உறுதியும் சூழலும் இன்மையால் உறங்கிக் கிடக்கின்றன.

**தமிழரின் நிலை :** திருவள்ளுவரும், சங்கப் புலவர்களும், வள்ளலாரும், சித்தர்களும் விளக்கிய மனித இன மாண்புகள், சமுதாய வாழ்வில் இடம் பெறவோ வெற்றி பெறவோ இயலவில்லை. வடலூர் வள்ளலார், “கடை விரித்தேன், கொள்வாரில்லை- விடை கொண் டேன்” என்று கூறி மறைந்து விட்டார் என்றால், அது காறும் கூறப்பட்ட அறிவுரை கள் எடுபடவில்லை என்று தானே பொருள்?

இந்நிலை ஏன், எதனால் விளைந்தது? தமிழர்கள் அறிவற்றவர்களா? பண்பற்றவர் களா? இரக்க மற்றவர்களா? பிறர் நலனை மதிக்காதவர்களா? கடவுள் பற்று அற்றவர்களா? இருந்தும் ஏன் சாதி வேற்றுமையும் சமயப்பற்றின் வழி எழும் பகையும் வளர்ந்தன? நியாய உணர்வு, பொது நீதி, ஏன் வெற்றி பெறவில்லை?

தமிழன் தனது தனி மரபுக் காக்கும் இலக்கியங்களில் பற்றுக் கொள்ளாது, வட மொழி வழிபட்ட இதிகாச புராணங்களிலும், வைதீக சடங்குகளிலும், பக்தி வளர்க்கும் வழியிலும் பற்றுடையவனானதால் தன் தனித் தன்மையைக் காத்து கொள்ளாதவனா யினான்? நாளடைவில் அவற்றை அறியாத

## பேராசிரியர் க. அன்பழகன்



வனும் ஆயினான், அவற்றை அறிந்தாலும் வைதீக மத புராணக் கற்பனையில் இருந்து பிரித்து காண முடியாதவனாயினான்..

கலையுரைத்த கற்பனை எல்லாம் நிலையெனக் கொண் டாடும், கண்மூடிப் பழக்கமெல்லாம் மண் மூடிப் போக வேண்டும்' எனும் வள்ளலார் வாக்கினைப் புரிந்து கொள்ளவும் இயலாத வனானான். ஏன்? தன்னை ஒரு இனத்தவன் என்றும், தனக்கென ஒரு மொழி, இலக்கியம், மரபு, நாகரீகம் உண்டெனவும், அதற்கு மாறானவற்றை, எந்த வடிவில் வந்தாலும் ஏற்பது தனது இன அழிவுக்கு வழி செய்வது எனவும் உணராதவனாகவே ஆகிவிட்டான்.

ஆரியச் செல்வாக்கின் வழிவந்த கலாச் சாரம் ஒரு வகையிலும், மத நம்பிக்கைகளின் வழிபட்ட பகுத்தறிவுக்கு இடமற்ற சூழல் ஒரு வகையிலும் - தமிழனை தன் இனத்தை எண்ணிப்பாராத நிலைமைக்கு ஆளாக்கின.

**எண்ணத்தில் மாற்றப்பட்ட தலைகள் :** நீண்ட பல்லாயிரம் ஆண்டுகளாக ஒரே நிலத்தில் வாழ்ந்திருந்த பழமையும் - மூவேந்தர் ஆட்சிக் காலத்தில் இன உணர்வு கொள்ளுதற்கான தேவையும் வாய்ப்பு இன்மையும் அதன் விளைவாய்த் தமிழ் மண்ணில் தமிழின ஆட்சிக்கு மாறாக வேற்றின ஆட்சி ஏற்படலாகாது என்னும் எண்ணம் வேரூன்றாமையும் இதற்கிடையே வைதிக மதவழியால் தனித் தன்மை இழந்ததும் - நாளும் வலுப்பெற்ற ‘ஜாதி’ முரண்பாடுகளால் ஒற்றுமை கொள்ள முடியாத நிலைமையும், மூட நம்பிக்கைகள் இறுகிப்போனதால், மறுவுலக வாழ்வையே எண்ணும் மனப் பழக்கத்தால் இவ் வுலக வாழ்வில் இழக்கும் உரிமைகளை உணராத நிலைமையும் ‘தமிழனை’ மாற்றாரின் ஆதிக்கத்தை உணராமலே ஏற்று, மண்டியிடச் செய்து விட்டன.

தமிழன் - இன்னொரு இனத்தவன் இவனைப் பிரித்து அடையாளம் காட்டி - கொடுமைப் படுத்தத் தலைப்படும் போதுதான் கொடுமையிலிருந்து மீள்வதற்கு வேறு வழியற்ற, துணையற்ற நிலையில் ‘ஓகோ, நாம் தமிழர்’ என்று எண்ண முற்படுகிறான். இதுவரை அவன் பல மனிதரிடையே ஒரு மனிதன். அந்த மனிதத் தன்மையைக் காத்துக் கொள்ள இடமில்லாத சூழ்நிலையாயினும் அதனை உணர மாட்டாதவன். உரிமை வாழ்வின் பயனை அவனால் மதித்தறிய முடிவதில்லை.

ஒரு வகையில் அடிமைகளில் விலைக்கு வாங்கப்பட்ட ஏவலர்கள் அந்த அடிமை நிலைக்கு உணர்ந்து உள்ளங் குமுறுவதற்கு ஏதுவாக இருந்த அந்தத் தெளிவுங்கூட தமிழனுக்கு இல்லை.

கையில் விலங்கு - கால்களில் தளை - அமைக்கப்பட்டிருக்கும் இடமோ சிறை, ஆண்டையின் கையிலோ சவுக்கு, அடிக்கும் போது எதிர்த்தாலோ உயிரும் பறிக்கப்படும் எனும் நிலைக்கு ஆட்பட்டிருந்த கருப்பு நிற மக்கள் எல்லாம், எத்தனையோ போராட் டங்களில் ஈடுபட்டு பெரும்பகுதி விடுதலை கண்டுவிட்டனர்.

அப்படிப்பட்ட விலங்கும்-தளையும் கண்ணுக்குத் தெரியும்படி பூட்டப்பட வில்லையே தவிர - தமிழனின் எண்ணத்தில் - கருத்தில் சிந்தனையில் மாட்டப்பட்டுள்ள தளைகளே - சாதி உயர்வு தாழ்வு, வைதிகச் சடங்கு, வட மொழி ஆதிக்க நிலை - அதன் வழி வளர்ந்த மூடநம்பிக்கைகள். அதனால் தான் தமிழனுக்குத் தன்னையே அடையாளம் தெரியாத கருத்துக் குருடாகும் நிலை ஏற்பட்டு, அந்த நிலை இன்றும் மாறவில்லை.

தந்தை பெரியார் வந்தார் !

இவைகளெல்லாம் - பல்வேறு வகையில் - பல்லாண்டு காலம் எண்ணிப்பார்த்து, நாமறிந்த உண்மைகளை மற்றவர்களுக்கும் அறிந்தாக வேண்டும் என்று தீர்மானித்து, அந்தப் பணியைவிடத் தாம் தமது வாழ்நாளில் செய்யவேண்டிய பணி வேறு இல்லை என்னும் முடிவுக்கு வந்து, ‘தீண்டாமைக் கொடுமை’, ‘ஜாதி’, ‘வருண தருமம்’, ‘வைதிகம்’, ‘வட மொழி ஆதிக்கம்’, ‘புரோகிதச் செல்வாக்கு’, ‘சடங்குகள்’, ‘புராணங்கள்’, ‘மூடநம்பிக்கைகள்’ ஆகிய வற்றை நொறுக்குவதற்கான சம்மட்டியாகச் ‘சுயமரியாதை இயக்கத்தை’த் தொடங்கிப் பகுத்தறிவு பரப்பும் பணியில் ஈடுபட்டார் தந்தை பெரியார் அவர்கள். அந்த நோக்கம் நிறைவேற பலமுனைத் தாக்குதலும், பல்வேறு கோணத்திலான விளக்கங்களும் தேவை என்று தெளிந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் - தமது சிந்தனைத்திறன் மிக்க பேச்சாலும் - எழுத்தாலும் - கலைப் பணி யாலும் துணை நின்றார்கள்.

இருபது நூற்றாண்டுகளாகவே மெல்ல மெல்ல உருக்குலைந்து, உள்ளமும் கெட்டுப்போன தமிழினத்தைத் 'தன்மானம்' கொள்ளச் செய்வதும் - 'பகுத்தறிவு' தனைப் பயன்படுத்தச் செய்வதுமே - இழந்த மனிதத் தன்மையை உணரச்செய்யும் வழி என்றும் , அப்படிப் பெறும் விழிப்புணர்வில் அவன் தமிழன் (திராவிடன்) என்னும் உணர்வு பெறலாகுமென்றும் தெளிந்த சிந்தனைச் சிற்பி தந்தை பெரியார் அவர்களே ஆவார்.

**அறிஞர் அண்ணா :** கடுங் காய்ச்சல் தீரும் மருந்து கொடுத்தால் - வாய் உளறுதலும் நிற்கும் - வாய்க் கசப்பும் மாறும், நிதானம் வந்தபின் எதிரிலுள்ளோர் புலனாவர் என்பதை ஒப்ப - தமிழினத்தின் வைதிக வழிபட்ட காய்ச்சல் நீங்கும் கடுமையான மருந்தாகத்தான், சுயமரியாதை - பகுத்தறிவு இயக்கம் தந்தை பெரியாரால் காணப்பட்டது. அந்த மருந்தினை இனிப்பில் வைத்து விழுங்கச் செய்யும் முறையை கொண்டவரே அறிஞர் அண்ணா அவர்கள்.

எனவே தமிழினத்தின் வரலாற்றில் காணப்படும் அடிப்படை வீழ்ச்சியை - தாழ் நிலையை - அடிமை மனப்பான்மையை மாற்ற விரும்பும் எவரும் தன்மானப் பகுத்தறிவுச் சிந்தனையைப் பரப்புவதன் மூலம் தமிழர்களைத் தம்மை உணர்ந்தவர்களாக ஆக்கிவிடும் பணியையே தலையான பணியாக உணர்ந்து மேற்கொண்டாக வேண்டும். எதிர்ப்புகள் எத்தனை வந்தாலும், எப் பக்க மிருந்து வந்தாலும், எதற்கும் அஞ்சாது, ஏன் ? எப்படி ? எதற்காக ? என்னும் கேள்வியை எழுப்பி விடைகாணும் ஆற்றலை - நம்மிடையே பலரிடம் உருவாக்கிய தந்தை பெரியாரின் தொண்டே - தமிழர்களை விழுப்புறச் செய்யும் வழி கண்ட தலையான தொண்டாகும்! வாழ்க பெரியார் ! விழிப்புறுக தமிழினம் !

(முடிவுற்றது)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.300
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 8973341377

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மாவட்டக் கழகக் கூட்டங்களின் எழுச்சி

*மாவட்டக் கழகக் கலந்துரை யாடல்கள்:*

**கடலூர் :** 27.12.2022 அன்று சிதம்பரம் ஏபிஎன் மஹாலில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் கடலூர் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. பெரியார் பிஞ்சு சி.சந்தோஷ் பெரியார் பாடல் பாட நிகழ்ச்சி தொடங்கியது. மா.து.தலைவர் செ.பிரகாஷ், வரவேற்பு கூறினார். தலைமைக் குழு உறுப்பினர் ந.அய்யனார் இயக்கத்தின் தேவை மற்றும் நோக்கம் குறித்து விளக்கிப் பேசினார். அதன்பின் மாவட்ட பொறுப்பாளர்கள் ஆ. சதிசு - மாவட்ட அமைப்பாளர், ர.சிவகுமார் - மாவட்ட செயலாளர், ப.அறிவழகன் - அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர், அ.மதன்குமார் - மாவட்டத் தலைவர் உள்ளிட்டோர் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

பெரியார் பார்வை ஆசிரியர் கவி பங்கேற்று தன்னுடைய கருத்துகளை பகிர்ந்து கொண்டார். இக்கூட்டத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் உள்ளிட்டோர் இயக்கத்தின் நோக்கம் பற்றியும் இயக்க நடைமுறை பற்றியும் விளக்கினர். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூட்டத்திற்கு தலைமையேற்று சிறப்புரை யாற்றினார்.

இயக்கத்தின் நோக்கம் குறித்தும் இயக்கத்தின் செயல்திட்டங்களை எவ்வாறு வகுத்துக் கொள்வது என்பது குறித்தும் விளக்கினார். ப. அறிவழகன் - அறிவியல் மன்ற அமைப்பாளர் நன்றி கூறினார்.

**மதுரை :** மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் 26.12.22 அன்று மணியமுதன் இல்லத்தில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் மா.பா. மணிஅமுதன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி முன்னிலை வகித்தார்.

அமைப்புச் செயலாளர் ரத்தின சாமி, கழகப் பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கழக எதிர்கால செயல்பாடுகள், ‘புரட்சிப் பெரியார் முழக்க’ சந்தா குறித்து ஆலோசனை களையும், பெரியார் மீதான அவதூறுகளுக்கான மறுப்பு களையும் பேசினார்கள். மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி, யோகேஷ், அழகர், காளி, முருகேசன், வாசுகி, பிரபாகரன் , விக்னேஸ், அய்யப்பன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**தஞ்சாவூர் :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் தஞ்சாவூர் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 26.12.2022 மாலை 6.00 மணிக்கு பேராவூரணி பெரியார் அம்பேத்கர் நூலகத்தில் கழகப் பொருளாளர் திருப்பூர் சு. துரைசாமி தலைமையில் நடை பெற்றது.

அமைப்பு செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம், மாவட்ட செயலாளர் கு. பாரி, மாவட்ட அமைப்பாளர் சித. திருவேங்கடம், ஒரத்தநாடு ஒன்றிய செயலாளர் க. சொ. சிவசுப்பிர மணியன், சோலை மாரியப்பன், கும்பகோணம் ஒன்றிய செயலாளர் சா. வெங்கடேசன், திருவிடைமருதூர் ஒன்றிய செயலாளர் மா. கரிகாலன், பட்டுக்கோட்டை ஒன்றிய செயலாளர் சபா. மணிகண்டன், பேராவூரணி ஒன்றிய தலைவர் அ. கோவிந்தன், பேராவூரணி ஒன்றிய செயலாளர் மருத.உதயகுமார், பேராவூரணி நகர அமைப்பாளர் தா. கலைச்செல்வன், தோழர்கள் அறிவுச்செல்வன் பெரிய சாமி, அரும்பு செல்வன் பெரியசாமி, வெ. அய்யப்பன், தோழமை இயக்கங் களான அறநெறி மக்கள் கட்சி பொதுச்செயலாளர் ஆயர் த.ஜேம்ஸ், தமிழ்வழிக் கல்வி இயக்க மாநில துணைச் செயலாளர் மெய்ச்சுடர் நா. வெங்கடேசன், தமிழக மக்கள் புரட்சி கழகப் பொறுப்பாளர்கள் பைங்கால் மதியழகன், கொன்றை சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை வழங்கினர்.

கலந்துரையாடலில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :

1) பெரியாரின் கொள்கையை வாழ்வியலாக ஏற்றுக் கொண்டு பணியாற்றிவரும் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய 59 நூல்களை அரசுடமையாக்கி பெரியாரின் கொள்கைகளை பொது மக்களிடம் பரப்பிட வழிவகை செய்துள்ள தமிழ் நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிப்ப தோடு, பரிவுத் தொகையாக 15 இலட்சம் அளித்து பொதுச் செயலாளரை கவுரவித்த அரசுக்கும், தஞ்சை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

2) கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம் இதழை மீண்டும் பேராவூரணி, தஞ்சை மாவட்டம் முழுவதும் கொண்டு சேர்க்கும் பணியினை தொய்வின்றி செய்வது என்றும் குறைந்தது 100 சந்தாக்களை ஒவ்வொரு நகர பகுதிகளிலும் சேர்ப்பது என தீர்மானிக்கப்படுகிறது.

3) சமூக நீதியை குழித் தோண்டிப் புதைக்கும் வகையில் அரிய வகை ஏழைகள் என உயர்சாதியினருக்கு இட ஒதுக்கீடு வழங்கிட யாரும் கோரிக்கை வைக்காமல் இரவோடு இரவாக 3 சதவீத உயர்சாதி யினருக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவது. உழைக்கும் மக்களான இழிவை சுமந்து கொண்டிருக்கும், பிற்படுத்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமையை பறிக்கும் செயல் என இக்கூட்டம் கருதுகிறது.

வருடம் 800,000 வருமானம், 5 ஏக்கர் நிலம், வீடு உள்ளவர்கள் ஏழைகள் என பொருளாதார அளவுகோலைக் கொண்டு உயர்சாதி ஏழைகளுக்கு 10 சதவீத இட ஒதுக்கீட்டால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஏற்படும் கேட்டினை விளக்கி மாவட்டம் முழுவதும் ஒன்றியம் வாரியாக தெருமுனைக் கூட்டங்களை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

முடித்த அர்ச்சகர்களுக்கு பெரியார் பிறந்த நாளான செப்.17 அன்று சென்னை மாவட்டக் கழக சார்பில பாராட்டு விழா எழுச்சியுடன் நடைபெற்றது. சனாதன எதிர்ப்புக் கூட்டமாக கலை நிகழ்வுகளுடன் விழா நடந்தது.

**அக்டோபர் :** சென்னை மாவட்டக் கழக சார்பில் வைதீகத்தை எதிர்த்த வள்ளலார் என்ற தலைப்பில் தேனாம்பேட்டை அன்பகத்தில் சிறப்பான கருத்தரங்கம் கலை நிகழ்வுகளுடன் நடந்தது.

**நவம்பர் :** நவம்பர் 27ஆம் நாள் மேட்டூர் அருகே விடுதலைப் புலிகள் 3 ஆண்டுகள் இராணுவப் பயற்சி எடுத்த புலியூரில் மாவீரர் நாள் கழக சார்பில் நடத்தப்பட்டது. தொல். திருமாவளவன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

நவம்பர் 27 காலை கழகத்தின் தலைமைக் குழு மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் கழகத் தலைவர் தலைமையில் கூடி கழக ஏட்டின் வளர்ச்சிக் குறித்து விவாதித்தது.

நவம்பர் 26 அன்று பெரியார் நடத்திய அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்ற பேராளிகளை நினைவுகூர்ந்து சட்ட எரிப்பு நாள் சென்னை, ஜலகண்டபுரம், பேராவூரணி, மதுரை, திருப்பூர், கோவை, கோபி, சேலம், பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளில் பரப்புரைக் கூட்டங்கள் நடந்தன. ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

வயலூர் முருகன் கோயிலில் அரசு ஆணைப்படி அர்ச்சகராக நியமிக்கப்பட்டவர்களை கருவறைக்குள் பூஜை செய்ய தடை செய்து மிரட்டிய பார்ப்பன அர்ச்சகர்களைக் கண்டித்து சென்னை மாவட்டக் கழக சார்பில் அண்ணாசாலை பெரியார் சிலை அருகே கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (நவ. 23) மதுரையிலும் கழகத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வீட்டுப் பாடக் குறிப்பேடுகளில் மாணவர்களிடம் ஜாதி கேட்கும் தனியார்ப் பள்ளிகளைக் கண்டித்து கோவையில் கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (நவம். 26)

**டிசம்பர் :** ஈரோடு மாநகராட்சிக்கு உரிமையான அரசு வளாகத்தில் யாகசாலைக் கூடம் அமைக்கப்பட்டதை அகற்றக் கோரி ஈரோடு மாவட்டக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. தோழர்கள் கைதானார்கள்.

சேலம் சங்கரமடத்தைத் தாக்கியதாக நான்கு ஆண்டுகளாக நடந்த வழக்கில் கழகத் தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (டிச. 2)

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராநேந்திரன் எழுதிய 59 நூல்களை தமிழக அரசு நாட்டுடைமையாக்கியது. மரபு உரிமைத் தொகையாக ரூ.15 இலட்சத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார். நிகழ்வில் கழகத் தலைவர் பங்கேற்றார்.

## கழக வழக்கறிஞர் திருமூர்த்தி தந்தை இராமையா மறைவு

கழகத்தின் வழக்குகளுக்காக தொடர்ந்து வாதாடி வரும் வழக்கறிஞர் திருமூர்த்தி தந்தை இராமையா முடிவெய்தினார்.

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞரும், கழகத்தின் வழக்குகளுக்காகத் தொடர்ந்து வாதாடி வரும் திருமூர்த்தி அவர்களின் தந்தை கோ.இராமையா (77), 22.12.2022 அன்று கடலூர் மாவட்டம், சிறுபாக்கம் கிராமத்தில் முடிவுற்றார். இராமைய்யாவின் இறுதி ஊர்வலம் 23.12.2022 அன்று சிறுப்பாக்கம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு ஆகியோர் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். உடன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, தலைமைக்குழு உறுப்பினர்கள் அய்யனார், காவை ஈஸ்வரன், விழுப்புரம் மாவட்ட செயலாளர் இளையரசன், கடலூர் மாவட்டத் தலைவர் மதன்குமார், கடலூர் மாவட்ட செயலாளர் சிவக்குமார் ஆகியோர் உட்பட ஏராளமான கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

வழக்கறிஞர் திருமூர்த்தி அவர்களுக்கு கழக சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 05th January 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN